ஊடக அறிக்கை
19.09.2024

சிறீ லங்காவின் சனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு ஈழத்தமிழ் மக்களைக் கோருகிறோம்..........!
இத்தாலி ஈழத்தமிழர் மக்களவை.

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரங்கொண்ட அதிபரை தெரிவு செய்வதற்கான தேர்தல் இம்மாதம் 21ம் நாள் நடைபெறவுள்ள நிலையில், இத் தேர்தலில் வாக்களிக்காது அதனை முற்றுமுழுதாகப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களை இத்தாலி ஈழத்தமிழர் மக்களவை கோரிக்கை விடுகின்றது.

ஏன் இத் தேர்தலை முற்றுமுழுதாகப் புறக்கணிக்குமாறு நாம் கோருகின்றோம் என்றால், ஓர் தேசிய இனமான நாங்கள் எங்கள் தாய்மண்ணிலேயே அனாதைகளாக விடப்பட்டபோது 1976 மே 16ம் திகதியில் ஈழத்தமிழ் மக்களின் ஏகோபித்த வல்லமைமிக்க குரலாக எழுந்ததுதான் "வட்டுக்கோட்டைத் தீர்மானம் "

இறைமையுள்ள சுதந்திர தமிழ் ஈழம் என்ற தமிழர்களின் தாயகம் 1977ல் நடைபெற்ற இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் ஏகோபித்த அங்கீகாரம் இதற்கு கிடைத்ததை வரலாறு மறுப்பதற்கு இல்லை.இந்த ஏகோபித்த ஆதரவுடன் சென்ற தமிழர் தரப்பு இலங்கையின் வரலாற்றில் எதிர்க்கட்சியாக அமர்ந்தும் தமிழினம் கொடுத்த ஆணையை சரியானமுறையில் சர்வதேசங்களுக்கு எடுத்துச்செல்லாமல்,கிடைத்த வரலாற்று வாய்ப்பினை தவறவிட்டு சிங்கள பேரினவாதத்திற்கு துணையாக நின்று தமது இனத்திற்கு துரோகம் இழைத்ததன் விளைவே ஆயுதப்போராட்டம் தோற்றம் பெற்றது.

எமது தேசிய தலைமையின் வழிகாட்டலில் நடைபெற்ற நேர்த்தியான தூரநோக்கம் கொண்ட வலிமைமிக்க அரசியல்,ஆயுத, மக்கள் போராட்டத்தை சர்வதேச அரங்குகளில் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களை தமக்கு சாதகமாக மாற்றிய சிங்கள இனவழிப்பு ஏகாதிபத்தியம் பகிரங்க இனவழிப்பை துணிகரமாக 2009 மே 18ல் செய்ததின் விளைவு எமது மக்களை பாதுகாக்க கவசமாக இருந்த ஆயுத பலம் மௌணிக்கப்பட்டது.ஆனால் எமது அரசியல் பலம் இன்னமும் 15வருடங்கள் கடந்தும் பலமாக உள்ளதை துல்லியமாக கணக்கிட்ட சிங்கள ஏகாதிபத்திய ரணில் தனது நரித்தந்திரத்தினால் "தமிழர்களின் தாயகக் கோட்பாடை" இலங்கைத்தீவில் இருந்து முற்றாக நீக்க போட்ட வரைபுதான் தமிழர்களுக்குள் இருந்து பொது வேட்பாளரை நியமித்தல்.

இன்று சங்கு சின்னத்தில் போட்டியிடும் சிறீ லங்கா அதிபருக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் என தமிழரசுக்கட்சி உறுப்பினரும் முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான பாக்கியசெல்வம் அரியநேந்திரன் களமிறக்கப்பட்டுள்ளார். அவர் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு அறவே இல்லாத நிலையிலும், திரு.அரியநேந்திரன் அவர்கள் நாங்கள் மேற்கூறிய சகல வரலாற்று ஆதாரங்களுடன் பயணித்தவரே ஆனால் அவருக்கு ஏன் ஓர் விடையம் புரியவில்லை. "வட்டுக்கோட்டைத் தீர்மானதின்"அடிப்படையில் தமிழ் மக்களின் தாயக கோட்பாடு இருக்க அதற்கூடாக பயணித்த தான் இன்று சிறீ லங்கா அதிபருக்கான தேர்தலில் நிற்பதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை புறந்தள்ளி சிங்கள மக்களுக்கும் அதிபராகவும்,கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்பை மிக கச்சிதமாக செய்யும் சிறீ லங்காவின் முப்படை இராணுவத்திற்கும் தளபதியாகவும் பௌத்த சாசனத்தின் பாதுகாவலராகவும் மாறுவேன் என்று தெரிந்து தானே நிற்கின்றார்.

இத்தனைகாலமும் தமிழர் தாயகம்,இறையாண்மை,சுயநிர்ணயஉரிமை,இனவழிப்பு சிங்கள அரசு,அதன் இராணுவம் என்று கூறியவரே 2024 சிறீ லங்கா அதிபர் தேர்தலில் போட்டியிட்டார்.அவருக்கு தமிழர் இவ்வளவு வாக்கு அளித்துள்ளார்கள்.ஆகவே சிறீ லங்காவில் வாழும் சிறுபான்மை தமிழர்கள் ஒன்றுபட்ட தேசத்தில் ஒற்ரையாட்சி அரசியலமைப்பை ஏற்று வாழ சம்மதித்துள்ளார்கள்.எனவே தமிழர்கள் இங்கு

*Address: Via Giorgio Amendola 87, 42040 Campegine, Reggio nell'Emilia, Italy*
*Email: consigliodeitamil@gmail.com*

சுதந்திரமாக வாழுகின்றார்கள் அவர்களுக்கு எந்தப்பிரச்சனையும் இல்லை என்று தமது இராசதந்திர நகர்வை சடுதியாக மேற்கொண்டு தமிழ் இனவழிப்பை இன்னமும் துணிகரமாக செய்யவும்,இனவழிப்பு இராணுவத்தையும் அதற்கு துணையாக இருந்த,இருக்கும் தலைவர்களையும் பாதுகாப்பதே தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஊடாக சிங்களம் கண்டவெற்றி.

எனவே அன்பார்ந்த எமது உறவுகளே 1977ம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு அமைவாக வாக்களித்த தமிழ் மக்கள் மீள அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியமில்லை.அதன் அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப்பயணம் தொடரும்.அதுவே தமிழருக்கான விடியல் இத்தகைய புறச் சூழலில் சனாதிபதித் தேர்தலை முற்றுமுழுதாகப் புறக்கணிப்பதன் மூலம் ஒன்றிணைந்த மக்களாக எதிர்வரும் 21ந் திகதி புதிய வரலாற்றுப்பதிவோடு தமிழீழ,மண்ணையும் மாவீரர்களின் கனவையும் பாதுகாப்போம் என்று தாயக உறவுகளை இத்தாலி ஈழத்தமிழர் மக்களவை வினயமாகக் கேட்டுக் கொள்கிறது.

*Address: Via Giorgio Amendola 87, 42040 Campegine, Reggio nell'Emilia, Italy*

*Email: consigliodeitamil@gmail.com*